# 'பள்ளிப் பருவத்திலேயே சேமிக்கும் பழக்கத்தை மாணவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்'



திருவாரூரில் உலக சிக்கன தினவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் மாவட்ட ஆட்சியர் இல. நிர்மல்ராஜ்.

திருவாரூர், ஜன. 9: சேமிக்கும் பழக்கத்தை மாணவ, மாணவியர் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே நடைமுறையில் வைத்துக் கொள்ள வேண்டும் என திருவாரூர் மாவட்ட ஆட்சியர் இல. நிர்மல்ராஜ் கூறினார்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உலக சிக்கன தின விழா திங்கள்கிழமை மாலை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் இல. நிர்மல்ராஜ் தலைமை வகித்துப் பேசியது:

அனைவரும் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தவே ஒவ்வொரு ஆண்டும் உலக சிக்கன தினம் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக மாணவ, மாணவியரிடம் சிறு சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சேமிப்பு குறித்து பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நடனப் போட்டி, நாடகப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டு பரிசு மற்றும் நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் சிறு சேமிப்பு என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்று. சேமிக்கும் பழக்கத்தை மாணவ, மாணவியர் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே நடைமுறையில் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் அது எதிர்காலங்களில் மிகவும் உதவியாக இருக்கும். ஒவ்வொரு நாளும் நாளிதழ்களில் வணிகம், உலக பொருளாதாரம் குறித்த செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. அவற்றை மாணவ, மாணவியர் முழுமையாகப் படித்து தெரிந்து கொள்ள வேண்டும். மேலும், பொது அறிவுத் திறனை வளர்த்துக்கொண்டால் எதிர்வரும் போட்டித் தேர்வுகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றார்.

இதைத்தொடர்ந்து 2016-17 - ஆம் ஆண்டு மாவட்ட அளவில் சிறுசேமிப்பு வசூலில் சாதனை செய்த மகளிர் முகவர்கள் 6 பேர், நகராட்சி அளவில் சாதனை செய்த மகளிர் முகவர்கள் 4 பேர், ஊராட்சி ஒன்றிய அளவில் சாதனை செய்த மகளிர் முகவர்கள் 10 பேர் என 20 பேருக்கு நற்சான்றிதழ்களையும், கேடயங்களையும் அவர் வழங்கினார்.

மேலும், சிறுசேமிப்பு குறித்து மாவட்ட அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி, நாடகப் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற 50 பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசு மற்றும் நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்புத்துறை) மாதவன், மாவட்ட ஊராட்சி செயலர் மல்லிகா, கண்காணிப்பாளர் பொற்செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

***Congratulation !* Sai Ram Matric. Hr.Sec. School , Tvr Students receiving award from The Collector of Thiruvarur - [ News Paper-News ]**